இந்திய உச்சநீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீடு எண். 3763/2018

டி.சரணவன்

எதிர்

கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் பகிர்மான வட்டம் மற்றும் பலர்

ஏப்ரல் 12, 2018

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு.ஏ.கே.சிக்ரி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு.அசோக்பூசன்

மின்சார சட்டம் :–

தமிழ்நாடு மின்சார பகிர்மான தொகுப்பு 2004 – சட்டக்கூறு 27 – மின்சாரம் வழங்குவதற்கான கோரிக்கை – வேளாண்மை மின்சார இணைப்பை வழங்குவதற்கான விண்ணப்பம் – விண்ணப்பத்தில் கிராம நிர்வாக அலுவலரின் கையொப்பம் இல்லை என்ற குறை சுட்டிக்காட்டப்பட்டு விண்ணப்பம் திருப்பி அனுப்பப்பட்டது – குறைகளை நீக்கி விண்ணப்பத்தை மறுசமர்ப்பிக்கப்பட்டது ஆனால் எதிர்மேல்முறையீட்டாளரால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை – மேல்முறையீட்டாளரால் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தார் – தனியமர் நீதிபதி எதிர்மேல்முறையீட்டாளர் விண்ணப்பத்தை பரிசீலிக்க உத்தரவிட்டார் – அதன் தொடர்ச்சியாக, மேல்முறையீட்டாளரால்

27.01.2017 அன்று தனது முந்தைய விண்ணப்பத்தைக் குறிப்பிட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது – மற்றொரு விண்ணப்பத்தின் மூலம் ரூ. 550/–க்கான கேட்பு வரைவோலை சமர்ப்பிக்கப்பட்டது – அதன் பிறகு, விண்ணப்பம் ரூ. 50/– பதிவு கட்டணத்துடன் சமர்ப்பிக்கப்படவில்லை என்று செயற்பொறியாளரால் தகவல் தெரிவிக்கப்பட்டது – பதிவு கட்டணம் செலுத்தாததால் விண்ணப்பம் முழுமையற்றது என்ற அடிப்படையில் எதிர்மேல்முறையீட்டாளர் தனியமர் நீதிபதியின் தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்தனர். மேல்முறையீட்டாளரால் 2017 இல் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று நீதியர் ஈராயம் தீர்ப்பளித்தது – மேல்முறையீட்டில் தீர்முடிவு :– சட்டக்கூறு 27 எதிர்மேல்முறையீட்டாளர்களின் மீது கடப்பாட்டினைச் செலுத்துகிறது – மின்சாரத் துறை, விண்ணப்பத்தில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி அதைத் திருப்பி அனுப்ப வேண்டும் – பதிவு கட்டணம் செலுத்தாததும், பிரிவு 27 ஆல் கருதப்படும் விண்ணப்பத்தில் உள்ள ஒரு குறைபாடே ஆகும் – எதிர்மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டாளரிடம் திருப்பி அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் உள்ள குறைகளைத் தெரிவிக்க கடமைப்படுகிறது என்பது சட்டப்பூர்வத் தன்மையுடைய குறிப்பாகும் – எதிர்மேல்முறையீட்டாளர், ரூ.50/– பதிவு கட்டணம் செலுத்தப்படாதது போன்ற எந்தக் குறையும் சுட்டிக்காட்டப்படவில்லை – தங்கள் செயலற்ற தன்மையாலோ அல்லது சட்டப்பூர்வ கடமைக்கு இணங்காத தங்கள் குறைபாட்டாலோ ஏற்பட்ட பலனை எதிர்மேல்முறையீட்டாளர் அனுபவிக்க அனுமதிக்க முடியாது – ரூ.50/– செலுத்தாதது, மேல்முறையீட்டாளரின் முழு கோரிக்கையையும் நிராகரிக்கக்கூடிய ஒரு காரணமாக இருக்க முடியாது – மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் முன்னுரிமை

06.12.2010 தேதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. ஏனெனில், எதிர்மேல்முறையீட்டாளர் 07.03.2011 அன்று உடனடியாக குறைபாட்டைச் சுட்டிக்காட்டி விண்ணப்பத்தைத் திருப்பி அனுப்பினர். மேலும், அது 21.03.2011 அன்றுதான் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டது – மேல்முறையீட்டாளர் தனது விண்ணப்பத்தை மறுசமர்ப்பித்த தேதியான 21.03.2011 முதல் பரிசீலனைக்கு உரிமை உடையவர்.

நீதிமன்றம் மேல்முறையீட்டை தீர்த்து வைத்து தீர்ப்பளித்ததாவது :–

1.1. தமிழ்நாடு மின்சார பகிர்மான தொகுப்பு 2004, சட்டக்கூறு 27 ன் படி குறைகளை சுட்டிக்காட்டி திருப்ப வேண்டும் என்று ஒரு கடப்பாட்டை எதிர்மேல்முறையீட்டாளர்கள் மீது விதிக்கிறது. 07.03.2011 ம் தேதி மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் திருப்பப்பட்ட போது கிராம நிர்வாக அதிகாரியின் கையொப்பம் இல்லை என்ற ஒரே குறையை மட்டும் குறிப்பிட்டுள்ளது. வேறு எந்த குறைகளுமோ, பதிவுக் கட்டணம் ரூ.50/– வைப்பீடு செய்யவில்லை என்ற குறையோ சுட்டிக் காட்டப்படவில்லை. வழங்கப்பட்ட நடைமுறையின்படி பதிவுக் கட்டணம் ரூ.50/– வைப்பீடு செய்யப்பட வேண்டியது மேல்முறை யீட்டாளரின் கடமை என்பது எதிர்மேல்முறையீட்டாளர்கள் சமர்ப்பிக்கிறார்கள். எதிர்மேல்முறையீட்டாளர்கள் வேளாண்மை மின்சார இணைப்பு பெறுவதற்குரிய நடைமுறையை சுட்டிக் காட்டுகிறார்கள். எனவே எதிர்மேல்முறையீட்டாளர்களால் வகுக்கப்பட்டிருக்கும் நடைமுறையில் பதிவுக் கட்டணம் ரூ.50/– சமர்ப்பிக்கப்பட வேண்டியிருக்கிறது. பதிவுக் கட்டணத்தை சமர்ப்பிக்காத செயல் தொகுப்பு 2004 வகையம் 27 ல்

குறிப்பிட்டுள்ளபடி விண்ணப்பத்தில் உள்ள ஒரு குறைபாடு ஆகும். சட்டத்தின் தன்மை கொண்ட மேற்சொன்ன குறிப்பு எதிர்மேல்முறையீட்டாளர்களை மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் திருப்பப்படும் போது அதன் குறைகளை தெரிவிக்க வேண்டும் என்று கடமைக்கு உள்ளாக்குகிறது. அவ்வாறு பதிவுக் கட்டணம் ரூ.50/- வைப்பீடு செய்யவில்லை என்று எதிர்மேல்முறையீட்டாளரால் எந்த குறையும் சுட்டிக்காட்டப்படவில்லை. தற்போது எதிர்மேல்முறையீட்டாளரின் மொத்த வழக்கும் பதிவுக் கட்டணம் ரூ.50/- வைப்பீடு செய்யப்படாத குறையை அடித்தளமாக கொண்டுள்ளது. எதிர்மேல்முறையீட்டாளர்கள் அவர்களின் மேல் வைக்கப்பட்டுள்ள சட்டப்படியான கடப்பாட்டினை செய்யாமல் இருக்கும் செயல்பாடிண்மை அல்லது குறையை பலனாக எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட முடியுமா? மேலும் குறிப்பிடப்பட வேண்டியது என்னவென்றால் திட்ட முன்வைப்பு ரூ.500/- மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.50/- ஆகியவற்றை உள்ளடக்கிய ரூ.550/-க்கான கேட்பு வரைவோலை 10.02.2017 ம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன கேட்பு வரைவோலை எதிர்மேல்முறையீட்டாளர்களால் 20.02.2017 ம் தேதி திருப்பப்பட்டது. கற்றறிந்த தனியமர் நீதிபதியால் வழங்கப்பட்ட தீர்ப்பில் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு பாரபட்சம் ஏற்படும் என்று சொல்லும் அளவில் எந்த உத்தரவும் இல்லை. கற்றறிந்த தனியமர் நீதிபதி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கும் அதில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கு மேல்முறையீட்டாளருக்கு அனுமதி அளித்திருக்கிறார். கற்றறிந்த தனியமர் நீதிபதி 07.03.2021 ம் தேதியிட்ட குறைகளை சுட்டிக் காட்டும் கடிதம்

ரூ.50/– செலுத்தப்பட வேண்டும் என்ற குறையை சுட்டிக் காட்டவில்லை என்பதை கண்டுள்ளார். ரூ.50/– செலுத்தப்படாமல் இருப்பது மேல்முறையீட்டாளரின் மொத்த கோரிக்கையையும் தவிர்க்கப்பட முடியும் என்பதற்கான காரணம் ஆகாது. மனுதாரர் தன்னுடைய நீதிப்பேராணை மனுவில் அவருடைய விண்ணப்பம் இலவச வேளாண்மை மின்சார இணைப்பு அல்லது ரூ.10,000/– அல்லது ரூ.25000/– அல்லது ரூ.50000/– என்ற திட்டத் தொகையை செலுத்தும் திருத்தப்பட்ட சுயநிதித்திட்டத்தின் கீழ் அவருடைய மூப்பை 06.12.2010ம் தேதியிலிருந்து கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

1.2. மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் மூப்பை 06.12.2010லிருந்து கணக்கிட வேண்டும் என்ற கோரிக்கையைப் பொறுத்தவரையில் நாங்கள் அதனை ஏற்றுக் கொள்ள உடன்படவில்லை. ஏனென்றால் 07.03.2011ம் தேதியன்று அந்த குறையை குறிப்பிட்டு உடனடியாக எதிர்மேல்முறையீட்டாளர்கள் விண்ணப்பத்தினை திருப்பியுள்ளார்கள். 21.03.2011ம் தேதி மறு சமர்ப்பிப்பு செய்யப்பட்ட விண்ணப்பம் வேறு எந்த குறையும் சுட்டிக்காட்டப் படாத காரணத்தினால் எதிர்மேல்முறையீட்டாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும் எந்த வகையில் பார்த்தாலும் மேல்முறையீட்டாளர் பதிவுக் கட்டணம் ரூ.50/–யை செலுத்த கோரி எதிர்மேல்முறையீட்டாளரால் கேட்கப்பட்டிருப்பார். கற்றறிந்த தனியமர் நீதிபதியின் தீர்ப்பு எதிர்க்கப்பட்டிருக்கும் மேல்முறையீட்டில் 21.03.2011ம் தேதி மறு சமர்ப்பிப்பு செய்யப்பட்ட விண்ணப்பம் பற்றி எந்த கேள்வியும் எழுப்பப்படாமல் 5 வருடங்களுக்கு பிறகு நீதிப்பேராணை மனு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்று எதிர்மேல்முறையீட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளது தொடர்புடையது.

1.3. 21.03.2011ம் தேதியன்று மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் திருப்பி சமர்ப்பிக்கப்பட்டது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். எனவே மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் 21.03.2011ம் தேதி சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக கருதப்படுவதற்கு மேல்முறையீட்டாளருக்கு உரிமை உள்ளது. பதிவுக் கட்டணம் ரூ.50 செலுத்தப்படவில்லை என்ற ஒரு சிறிய பிரச்சனையை வைத்து எதிர்மேல்முறையீட்டாளர்கள் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை மறுத்துக் கொண்டே இருக்கிறார்கள். மேல்முறையீட்டாளர் ஒரு தொழில்முறை வழக்கறிஞர் என்றும், அவர் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை தெரிந்து கொண்டிருக்க வேண்டும் என்றும், இரு நீதிபதிகள் அமர்வு தனது தீர்ப்புரையில் குறிப்பிட்டிருக்கிறது. மேல்முறையீட்டாளர் வழக்கறிஞர் என்ற ஒரே காரணத்தினால் மேற்படி ரூ.50 முன் வைப்பீடு வைக்கப்பட வேண்டும் என்பது தெரியாமல் இருந்தார் என்று அவர் சொல்லியிருப்பது நம்ப மறுக்கப்பட்டிருக்கிறது என்பதே மேல்முறையீட்டாளரின் வழக்கு ஆகும். ஒரு வழக்கறிஞர் சட்டத்தைப் பற்றி தெரிந்து கொண்டிருக்க வேண்டும் என்று அனுமானம் எழுப்ப முடியும், ஆனால் வேளாண்மை மின்சார இணைப்புக்கான விண்ணப்பம் செய்வதற்கு அனைத்து நடைமுறைகளையும் ஒரு வழக்கறிஞர் தெரிந்து வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று அனுமானிக்க முடியாது. பதிவு கட்டணமாக ரூ.50/– செலுத்துவது நடைமுறையின் ஒரு பகுதியாகும். இந்த நடைமுறை, ஒரு திட்டம் வகை வாரியாகப் பொருந்தும் என்பதையும் தெளிவாகக்

குறிக்கிறது. இதை யார் வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். தொழில்நிலை வழக்கறிஞர் இந்தத் திட்டத்தின் பலனைப் பெறத் தகுதியற்றவர் என்று ஊகிப்பதற்கு எந்த ஒரு ஒதுக்கப்பட்ட வகையும் இல்லை.

1.4. மேல்முறையீட்டாளர் பதிவுக் கட்டணமாக ரூ.50 சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தெரியாமல் இருந்தார் என்று சொல்லும் வாதம் இரு நீதிபதிகள் அமர்வால் எந்த காரணமும் இல்லாமல் மறுக்கப்பட்டிருக்கிறது. எதிர்மேல்முறையீட்டாளர் 07.03.2011 ம் தேதியிட்ட கடிதத்தை எழுதும் போது 06.12.2010 ம் தேதியிட்ட விண்ணப்பத்தில் உள்ள பதிவுக் கட்டணம் ரூ.50 செலுத்தப்படவில்லை என்ற குறையை சொல்லியிருப்பாரானால் இரு தரப்பினர்களின் நேரம் மற்றும் ஆற்றலை வீணாக்குவதையும் இந்த வழக்கையும் தவிர்த்து இருக்கலாம். எதிர்மேல்முறையீட்டாளர்கள் 07.03.2011 ம் தேதியிட்ட கடிதம் எழுதும் போது குறைபற்றி குறிப்பிடாமல் விட்ட செயலை அவர்களின் பலனுக்கு எடுத்துக் கொள்ள முடியாது. மேல்முறையீட்டாளர் விண்ணப்பத்தை மறுசமர்ப்பிப்பு செய்த 21.03.2011 ம் தேதியிலிருந்து இந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதாக கருதப்படுவதற்கு மேல்முறையீட்டாளருக்கு உரிமை இருக்கிறது என்றும், 07.03.2011 ம் தேதியிட்ட கடிதத்தில் குறையை பற்றி தெரிவிக்காமல் இருந்த தங்களுடைய செயல்பாடின்மையை வைத்து எதிர்மேல்முறையீட்டாளர்களால் பலன் பெற அனுமதிக்கப்பட முடியாது என்றும் நாங்கள் கருதுகிறோம்.

1.5 மறு சமர்ப்பிப்பு செய்யப்பட்ட 23.01.2011ம் தேதியிலிருந்து மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டிருப்பதாக எதிர்மேல்முறையீட்டாளர்கள் கருத வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. 20.02.2017ம் தேதியன்று எதிர்மேல்முறையீட்டாளர்களால் திருப்பப்பட்ட ரூ.550க்கான கேட்பு வரைவோலைக்கு பதிலாக ஒரு புதிய கேட்பு வரைவோலையை மேல்முறையீட்டாளர் மறுசமர்ப்பிப்பு செய்ய வேண்டும். மேற்கொண்டு செலுத்த வேண்டிய கட்டணங்கள் அல்லது இந்த வகைக்காக மேல்முறையீட்டாளரால் பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள் பற்றி மூன்று மாதத்திற்குள் தெரிவித்து இந்த விண்ணப்பத்தை எதிர்மேல்முறையீட்டாளர்கள் செயல்படுத்த வேண்டும்.

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு : உரிமையியல் மேல்முறையீட்டு எண்.3763/2018.

28.06.2017 தேதியிட்ட மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையின் நீதிப்பேராணை மேல்முறையீடு (மதுரை) எண். 846/2017 என்ற வழக்கில் தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

மேல்முறையீட்டாளருக்காக எஸ். நாகமுத்து, எம். பி. பார்த்திபன், ஏ. எஸ். வைரவன், சினேகா கலிதா ஆகிய வழக்கறிஞர்கள் முன்னிலையானார்கள்.

எதிர்மேல்முறையீட்டாளருக்காக வினோத் கண்ணா பி. வழக்கறிஞர் முன்னிலையானார்.

நீதிமன்றத்தின் தீர்ப்பானது மாண்புமிகு நீதியரசர் திரு.அசோக் பூசன், அவர்களால் பகரப்பட்டது.

அனுமதி அளிக்கப்பட்டது.

எதிர்மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த நீதிப்பேராணை மேல்முறையீட்டை அனுமதித்து வழங்கப்பட்ட 28.06.2017ம் தேதியிட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வின் தீர்ப்புரையை எதிர்த்து இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இரு நீதிபதிகள் கொண்ட அமர்வின் தீர்ப்புரையால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

3. இந்த மேல்முறையீட்டை தீர்மானிப்பதற்காக குறிப்பிடப்படும் தேவையான இந்த வழக்கினுடைய சுருக்கமான பொருண்மைகள் பின்வருமாறு :

மேல்முறையீட்டாளர் தன்னுடைய 5 ஏக்கர் அளவு கொண்ட வேளாண்மை நிலத்தினுடைய வேளாண்மைக்கு தேவையான உபகரணங்களை பயன்படுத்தும் வகைக்காக வேளாண்மை மின் இணைப்பு வழங்க கோரி 06.12.2010ம் தேதியிட்ட ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்திருக்கிறார். இந்த விண்ணப்பம் தமிழ்நாடு மின்சார வாரியம்

செயற்பொறியாளர் (பகிர்வு) ஊரகம், என்பவரால் கீழ்க்கண்ட காரணத்துடன் திருப்பப்பட்டுள்ளது.

நீங்கள் அனுப்பிய இந்த விண்ணப்பம் கிராம நிர்வாக அதிகாரியின் கையொப்பத்தை கொண்டிருக்கவில்லை. எனவே இது திருப்பப்படுகிறது.

4. இந்த மேல்முறையீட்டாளர் குறைகளை நிவர்த்தி செய்த பின்பு 21.03.2011ம் தேதி இந்த விண்ணப்பத்தை திரும்ப சமர்ப்பித்துள்ளார். மேற்படி விண்ணப்பத்தின் மீது எதிர்மேல்முறையீட்டாளர்களால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதால் மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் இந்த மேல்முறையீட்டாளரால் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

5. மேல்முறையீட்டாளரின் வழக்கை பரிசீலித்த பிறகு கற்றறிந்த தனியமர் நீதிபதி கீழ்க்கண்ட உத்தரவினை அளித்து அந்த நீதிப்பேராணை மனுவை உத்தரவிட்டார்

4. எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞரால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்சொன்ன விபரங்கள் பதிவிடப்படுகிறது. விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கும் அல்லது ஏற்கனவே சமர்ப்பித்திருக்கும் விண்ணப்பத்தில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இருக்கக்கூடிய தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்து மனுதாரர்

இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தாக்கல் செய்து கொள்ளலாம். அதற்கு பிறகு எதிர்மனுதாரர்கள் சட்டத்தின்படி இந்த மனுதாரரின் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து சட்டத் தடைகள் எதுவும் இல்லாத பட்சத்தில் அதிலிருந்து ஒரு மாதத்திற்குள் தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

மேற்சொன்ன உத்தரவுடன் இந்த நீதிப்பேராணை மனு தீர்க்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

6. கற்றறிந்த தனியமர் நீதிபதியின் 20.01.2017 ம் தேதியிட்ட உத்தரவைத் தொடர்ந்து இந்த மேல்முறையீட்டாளர் 27.01.2017 ம் தேதி அவர் முன்பு 06.12.2010 ம் தேதி தாக்கல் செய்த விண்ணப்பத்தை குறிப்பிட்டு செலுத்தப்பட வேண்டிய கட்டணத்தின் விபரங்களை வழங்க வேண்டுகோள் வைத்து விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளார். 10.02.2017 ம் தேதியிட்ட தொடர் விண்ணப்பத்தின் மூலம் ரூ.550/–க்கான கேட்பு வரைவோலையும் சமர்ப்பிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் வேளாண்மை மின்சார இணைப்பை பெறுவதற்குரிய நடைமுறையின்படி இருக்கக்கூடிய கட்டணமான ரூ.50/–யை சேர்த்து செலுத்தாத காரணத்தினாலும், இந்த திட்டத்தின் முன்வைப்புத் தொகையான ரூ.500/–யை வைப்பீடு செய்யவில்லை என்று செயற்பொறியாளர் தன்னுடைய 15.02.2017 ம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தியுள்ளார். ஒரு புதிய விண்ணப்பம் தகுந்த வருவாய் துறை ஆவணங்களுடன் கட்டணம் ரூ.50/–யுடன் சமர்ப்பிக்கப்படும்

பட்சத்தில் அந்த விண்ணப்பம் முன்னிலை அடிப்படையில் ஒரு புதிய விண்ணப்பமாக கருதப்பட வேண்டும் என்று மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும் உதவி செயற்பொறியாளர் 20.02.2017 ம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் ரூ.550/–க்கான கேட்பு வரைவோலையை திருப்பி அனுப்பி 15.02.2017 ம் தேதியன்று முன்பு சொன்ன அறிவுரையின்படி ஒரு புதிய விண்ணப்பம் செய்ய வேண்டும் என்று மேல்முறையீட்டாளரை கேட்டுக் கொண்டுள்ளார்.

7. எதிர்மேல்முறையீட்டாளர் 20.01.2017 ம் தேதியிட்ட கற்றறிந்த தனியமர் நீதிபதி தீர்ப்புரையினை எதிர்த்து மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் உரிமை பட்டய மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார். அந்த உரிமை பட்டய மேல்முறையீட்டில், மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் பதிவு கட்டணமான ரூ.50/–உடன் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அது முழுமையான விண்ணப்பம் அல்ல என்றும், கற்றறிந்த தனியமர் நீதிபதி அந்த விண்ணப்பத்தினை பரிசீலிக்க உத்தரவிட்டு தவறு இழைத்துள்ளார் என்றும் எதிர்மேல்முறையீட்டாளர் முக்கியமான காரணமாக முன்வைத்துள்ளார். இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு 28.06.2017 ம் தேதியிட்ட தீர்ப்புரையின் மூலம் கற்றறிந்த தனி நீதிபதியின் உத்தரவினை ரத்து செய்துள்ளது. மேல்முறையீட்டாளரால் 2017 ம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினை, அது சரியாக இருந்தால் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும், சட்டப்படியான உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு உத்தரவிட்டுள்ளது. இரு நீதிபதிகள் கொண்ட அமர்வின் தீர்ப்பால்

பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

8. இரு நீதிபதிகள் அமர்வின் தீர்ப்புரையை படிக்கும் போது இந்த மேல்முறையீட்டாளர் (நீதிப்பேராணை மேல்முறையீட்டின் எதிர்மேல்முறையீட்டாளர்) சட்டத் தொழில் செய்வதால் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளைப் பற்றி நன்றாக அறிந்தவராக இருப்பார் என்று கருத்தில் கொண்டு அவருக்கு எந்த தளர்வும் வழங்கப்பட முடியாது என்று கருதி உள்ளது என தெளிவாக தெரிகிறது. மேல்முறையீட்டாளர்/நீதிப்பேராணை மனுதாரர் இலவச வேளாண்மை இணைப்பு வழங்குவதற்காக கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமல் அவருடைய தவரின் மீதே ஒரு ஆதாயம் எடுக்க வேண்டும் என்று முயற்சி செய்துள்ளார் என்று இரு நீதிபதிகள் அமர்வு மேலும் கருத்துரைத்துள்ளது.

9. எதிர்மேல்முறையீட்டாளர்களால் எதிர் ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அந்த எதிர் ஆணையுறுதி ஆவணத்தில் தமிழ்நாடு மின்சார பகிர்மான தொகுப்பு 2004 ன் (இதற்கு பிறகு தொகுப்பு 2004 என்று குறிப்பிடப்படும்) வகையங்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த எதிர்மேல்முறையீட்டாளர்கள் இரு நீதிபதிகள் அமர்வின் உத்தரவினை ஆதரித்திருக்கிறார்கள். இந்த மேல்முறையீட்டாளரின் 06.02.2010 ம் தேதியிட்ட விண்ணப்பம் பதிவுக் கட்டணமான ரூ.50/–யை வைப்பீடு செய்யாத காரணத்தினால் முழுமையற்ற விண்ணப்பம் என்று கருதப்பட்டு அது பதிவு செய்யப்பட வேண்டியதில்லை என்று வாதம்

முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த மேல்முறையீட்டாளர் ஆறு வருட காலதாமதத்திற்கு பிறகு உயர்நீதிமன்றத்தை அணுகியுள்ளார் என்று வாதம் முன் வைக்கப்பட்டுள்ளது.

10. நாங்கள் தரப்பினர்களின் கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டோம் மற்றும் ஆவணங்களை கருத்தில் கொண்டோம்.

11. மேல்முறையீட்டாளரால் சமர்ப்பிக்கப்பட்ட வேளாண்மைக்கான மின்சார இணைப்புக்கான விண்ணப்பம் 2017 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது இந்த மேல்முறையீட்டில் எதிர்ப்புக்குள்ளான இரு நீதிபதிகள் அமர்வின் தீர்ப்புரையில் இருந்து தெளிவாக தெரிகிறது மற்றும் இந்த எதிர்மேல்முறையீட்டாளர்கள் அந்த விண்ணப்பத்தை சட்டத்தின்படி கருத்தில் கொள்ள வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறார்கள். நாம் கவனிக்க வேண்டிய ஒரே விஷயம், மேல்முறையீட்டாளர் தனது விண்ணப்பத்தை முந்தைய தேதியிலிருந்து கருத்தில் கொள்ள உரிமை உள்ளதா என்பதுதான்.

12. குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள வேளாண்மை மின்சார இணைப்புகள் மட்டுமே ஒவ்வொரு வருடமும் விண்ணப்பத்தின் மூப்பின் அடிப்படையில் வழங்கப்படுகிறது என்று எதிர்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்ஆணையுறுதி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலில் 06.02.2010 ம் தேதி தாக்கல் செய்யப்பட்ட வேளாண்மைக்கான மின்சார இணைப்பு விண்ணப்பத்தில் 07.03.2011 ம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் செயற்பொறியாளர் (பகிர்மானம்) அவர்கள்

மேல்முறையீட்டாளரால் அனுப்பப்பட்ட அந்த விண்ணப்பம் கிராம நிர்வாக அதிகாரியின் கையொப்பம் இல்லை என்ற காரணத்தினால் திருப்பப்படுகிறது என்று சொல்லி ஆட்சேபணை எழுப்பப்பட்டுள்ளது என்ற பொருண்மைக்கு இரு தரப்பிலும் எந்த தர்க்கமும் இல்லை. இந்த மேல்முறையீட்டாளர் கிராம நிர்வாக அதிகாரியின் கையொப்பம் பெற்று 21.03.2011 ம் தேதி அந்த விண்ணப்பத்தினை திரும்ப சமர்ப்பித்துள்ளார். எதிர்மேல்முறையீட்டாளர்களால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதால் அதற்கு பிறகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரைக் கிளையில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த நீதிப்பேராணை மனு 20.01.2017 ம் தேதி கற்றறிந்த தனியமர் நீதிபதியால் இந்த மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் சட்டத்தின்படி கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு உத்தரவு பிறப்பித்து தீர்க்கப்பட்டுள்ளது. இந்த மேல்முறையீட்டாளர் அந்த விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்யவும், குறைகளை நிவர்த்தி செய்யவும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளார். நீதிமன்ற உத்தரவுக்கு பின்பு இந்த விண்ணப்பம் பதிவு கட்டணமான ரூ.50/–உடன் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் கருத்தில் கொள்ளப்பட முடியாது என்றும், மேல்முறையீட்டாளர் தேவையான கட்டணத்துடன் புதிய விண்ணப்பத்தினை சமர்ப்பித்துக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டு செயற்பொறியாளர் குறிப்பிட்டுள்ளார்.

13. இந்த எதிர்மேல்முறையீட்டாளர்கள் மேற்படி தொகுப்பு 2004 ல் வகையம் 27(1)ன் விளக்கம் பின்வரும் விளைவு கொண்டது என்பதை முன்வைக்கிறார்கள்.

27. ஆற்றல் வழங்குவதற்கான வேண்டுகோள்

(1) XXX XXX XXX

விளக்கம் : இந்த உட்பிரிவுக்கான நோக்கங்களுக்காக, விண்ணப்பம் என்பது தேவையான கட்டணங்களை செலுத்தியதையும் மற்ற நிபந்தனைகளை பூர்த்தி செய்ததையும் காட்டும் ஆவணங்களை பகிர்மானம் பெறுபவர் செய்ய வேண்டிய விஷயங்களையும் குறிப்பிட்டு தகுந்த படிவத்தில் எல்லா வகையிலும் முழுமையாக உள்ள விண்ணப்பம் ஆகும்.

14. சட்டக்கூறு 27 ல் பின்வரும் விளைவு கொண்ட ஒரு குறிப்பு உள்ளது.

குறிப்பு : ஆற்றல் அளிப்பதற்கான வேண்டுகோள் விண்ணப்பம் முழுமையடையாமல் இருந்தாலும் அது நேரில் கொடுக்கப்பட்டாலும், அஞ்சல் மூலம் கொடுக்கப்பட்டாலும் விண்ணப்பம் பெறப்பட்டது என்பது எழுத்து மூலமாக ஒப்புகை செய்யப்பட வேண்டும். அந்த விண்ணப்பம் சரியாக இருந்தால் உடனடியாக பதிவு செய்யப்பட்டு ஒப்புகை செய்யப்பட வேண்டும். அந்த விண்ணப்பம் முழுமையாக இல்லாமல் இருந்தால் அந்த குறைகளை குறிப்பிட்டு பதிவு செய்யப்படாமல் திருப்பப்பட வேண்டும்.

15. குறைகளை சுட்டிக்காட்டி திருப்ப வேண்டும் என்று ஒரு கடப்பாட்டை மேற்சொன்ன வகையம் எதிர்மேல்முறையீட்டாளர்கள் மீது வைக்கிறது. 07.03.2011ம் தேதி மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் திருப்பப்பட்ட போது கிராம நிர்வாக அதிகாரியின் கையொப்பம் இல்லை என்ற ஒரே குறையை மட்டும் குறிப்பிட்டுள்ளது. வேறு எந்த குறைகளுமோ, பதிவுக் கட்டணம் ரூ.50/– வைப்பீடு செய்யவில்லை என்ற குறையோ சுட்டிக் காட்டப்படவில்லை. வழங்கப்பட்ட நடைமுறையின்படி பதிவுக் கட்டணம் ரூ.50/– வைப்பீடு செய்யப்பட வேண்டியது மேல்முறையீட்டாளரின் கடமை என்பது எதிர்மேல்முறையீட்டாளர்கள் சமர்ப்பிக்கிறார்கள். எதிர்மேல்முறையீட்டாளர்கள் வேளாண்மை மின்சார இணைப்பு பெறுவதற்குரிய நடைமுறையை சுட்டிக் காட்டுகிறார்கள். வேளாண்மை மின்சார இணைப்பை பெறுவதற்குரிய நடைமுறைகள் என்ற தலைப்பில் இணைப்பு R/1 தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. வகையம் 7 பின்வருமாறு

> 7. நிரப்பப்பட்ட விண்ணப்பம் மேற்சொன்ன அனைத்து ஆவணங்களுடன் அந்தந்த ஆள்வரைக்கு உட்பட்ட செயற்பொறியாளர்/செயல்பாடு மற்றும் பராமரிப்பு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தை பதிவு செய்வதற்காக ரூ.50/– செலுத்தப்பட வேண்டியிருக்கிறது. விண்ணப்பத்தை பதிவு செய்த பின்பு பதிவு எண்ணையும், பதிவு தேதியையும் குறிப்பிட்டு ஒப்புகை விண்ணப்பதாரருக்கு கொடுக்கப்படும்.

16. எனவே எதிர்மேல்முறையீட்டாளர்களால் வகுக்கப்பட்டிருக்கும் நடைமுறையில் பதிவுக் கட்டணம் ரூ.50/- சமர்ப்பிக்கப்பட வேண்டியிருக்கிறது. பதிவுக் கட்டணத்தை சமர்ப்பிக்காத செயல் தொகுப்பு 2004 வகையம் 27 ல் குறிப்பிட்டுள்ளபடி விண்ணப்பத்தில் உள்ள ஒரு குறைபாடு ஆகும். சட்டத்தின் தன்மை கொண்ட மேற்சொன்ன குறிப்பு எதிர்மேல்முறையீட்டாளர்களை மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் திருப்பப்படும் போது அதன் குறைகளை தெரிவிக்க வேண்டும் என்று கடமைக்கு உள்ளாக்குகிறது. அவ்வாறு பதிவுக் கட்டணம் ரூ.50/- வைப்பீடு செய்யவில்லை என்று எதிர்மேல்முறையீட்டாளரால் எந்த குறையும் சுட்டிக்காட்டப்படவில்லை. தற்போது எதிர்மேல்முறையீட்டாளரின் மொத்த வழக்கும் பதிவுக் கட்டணம் ரூ.50/- வைப்பீடு செய்யப்படாத குறையை அடித்தளமாக கொண்டுள்ளது. எதிர்மேல்முறையீட்டாளர்கள் அவர்களின் மேல் வைக்கப்பட்டுள்ள சட்டப்படியான கடமையை செய்யாமல் இருக்கும் செயல்பாடிண்மை அல்லது குறையை பலனாக எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட முடியுமா? இதற்குரிய பதில் வெளிப்படையாக இல்லை என்பதே ஆகும். மேலும் குறிப்பிடப்பட வேண்டியது என்னவென்றால் திட்ட முன்வைப்பு ரூ.500/- மற்றும் பதிவுக் கட்டணம் ரூ.50/- ஆகியவற்றை உள்ளடக்கிய ரூ.550/- க்கான கேட்பு வரைவோலை 10.02.2017 ம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன வரைவோலை எதிர்மேல்முறையீட்டாளர்களால் 20.02.2017 ம் தேதி திருப்பப்பட்டது. கற்றறிந்த தனியமர் நீதிபதியால் வழங்கப்பட்ட தீர்ப்பில் உள்ள மேற்சொன்ன 4 வது பத்தியில் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு பாரபட்சம் ஏற்படும் என்று சொல்லும் அளவில் எந்த உத்தரவும் இல்லை.

கற்றறிந்த தனியமர் நீதிபதி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கும் அதில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்கு மேல்முறையீட்டாளருக்கு அனுமதி அளித்திருக்கிறார். கற்றறிந்த தனியமர் நீதிபதி 07.03.2021 ம் தே தியிட்ட குறைகளை சுட்டிக் காட்டும் கடிதம் ரூ.50/– செலுத்தப்பட வேண்டும் என்ற குறையை சுட்டிக் காட்டவில்லை என்பதை கண்டுள்ளார். ரூ.50/– செலுத்தப்படாமல் இருப்பது மேல்முறையீட்டாளரின் மொத்த கோரிக்கையையும் தவிர்க்கப்பட முடியும் என்பதற்கான காரணம் ஆகாது. மனுதாரர் தன்னுடைய நீதிப்பேராணை மனுவில் அவருடைய விண்ணப்பம் இலவச வேளாண்மை மின்சார இணைப்பு அல்லது ரூ.10,000/– அல்லது ரூ.25000/– அல்லது ரூ.50000/– என்ற திட்டத் தொகையை செலுத்தும் திருத்தப்பட்ட சுயநிதித்திட்டத்தின் கீழ் அவருடைய மூப்பை 06.12.2010 ம் தேதியிலிருந்து கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்பதை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

17. மேல்முறையீட்டாளரின் விண்ணப்பத்தின் மூப்பை 06.12.2010 லிருந்து கணக்கிட வேண்டும் என்ற கோரிக்கையைப் பொறுத்தவரையில் நாங்கள் அதனை ஏற்றுக் கொள்ள உடன்படவில்லை. ஏனென்றால் 07.03.2011 ம் தேதியன்று அந்த குறையை குறிப்பிட்டு உடனடியாக எதிர்மேல்முறையீட்டாளர்கள் விண்ணப்பத்தினை திருப்பியுள்ளார்கள். 21.03.2011 ம் தேதி மறு சமர்ப்பிப்பு செய்யப்பட்ட விண்ணப்பம் வேறு எந்த குறையும் சுட்டிக்காட்டப் படாத காரணத்தினால் எதிர்மேல்முறையீட்டாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும் எந்த வகையில் பார்த்தாலும் மேல்முறையீட்டாளர் பதிவுக் கட்டணம்

ரூ.50/–யை செலுத்த கோரி எதிர்மேல்முறையீட்டாளரால் கேட்கப்பட்டிருப்பார். கற்றறிந்த தனியமர் நீதிபதியின் தீர்ப்பு எதிர்க்கப்பட்டிருக்கும் மேல்முறையீட்டில் 21.03.2011ம் தேதி மறு சமர்ப்பிப்பு செய்யப்பட்ட விண்ணப்பம் பற்றி எந்த கேள்வியும் எழுப்பப்படாமல் 5 வருடங்களுக்கு பிறகு நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எதிர்மேல்முறையீட்டாளர்கள் குறிப்பிட்டுள்ளது தொடர்புடையது. சி என்ற நீதிப்பேராணை மேல்முறையீட்டு காரணத்தில் சொல்லியுள்ள பின்வருவன பயன்பாடு உடையது ஆகும்.

> சி. கற்றறிந்த நீதிபதி அந்த நீதிப்பேராணை மனுதாரர் 06.12.2010ம் தேதி விண்ணப்பத்தை சமர்ப்பித்து பின்பு 21.03.2011ம் தேதி விண்ணப்பத்தை மறு சமர்ப்பிப்பு செய்து 2016ம் ஆண்டு நீதிப்பேராணை மனுவை, அதாவது 5 வருடங்கள் கழிந்த பிறகு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காரணம் குறித்து எந்த காரணமும் சொல்லாமல், தாக்கல் செய்துள்ளார்.

18. 21.03.2011ம் தேதியன்று மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் திருப்பி சமர்ப்பிக்கப்பட்டது என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். எனவே மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் 21.03.2011ம் தேதி சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக கருதப்படுவதற்கு மேல்முறையீட்டாளருக்கு உரிமை உள்ளது. பதிவுக் கட்டணம் ரூ.50 செலுத்தப்படவில்லை என்ற ஒரு சிறிய பிரச்சனையை வைத்து எதிர்மேல்முறையீட்டாளர்கள்

மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை மறுத்துக் கொண்டே இருக்கிறார்கள். மேல்முறையீட்டாளர் ஒரு தொழில்முறை வழக்கறிஞர் என்றும், அவர் விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளை தெரிந்து கொண்டிருக்க வேண்டும் என்றும், இரு நீதிபதிகள் அமர்வு தனது தீர்ப்புரையில் குறிப்பிட்டிருக்கிறது. மேல்முறையீட்டாளர் வழக்கறிஞர் என்ற ஒரே காரணத்தினால் மேற்படி ரூ.50 முன் வைப்பீடு வைக்கப்பட வேண்டும் என்பது தெரியாமல் இருந்தார் என்று அவர் சொல்லியிருப்பது நம்ப மறுக்கப்பட்டிருக்கிறது என்பதே மேல்முறையீட்டாளரின் வழக்கு ஆகும். ஒரு வழக்கறிஞர் சட்டத்தைப் பற்றி தெரிந்து கொண்டிருக்க வேண்டும் என்று அனுமானம் எழுப்ப முடியும், ஆனால் வேளாண்மை மின்சார இணைப்புக்கான விண்ணப்பம் செய்வதற்கு அனைத்து நடைமுறைகளையும் ஒரு வழக்கறிஞர் தெரிந்து வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று அனுமானிக்க முடியாது. பதிவுக் கட்டணமாக ரூ.50 செலுத்த வேண்டும் என்பது எதிர்மேல்முறையீட்டாளர்களால் வகுக்கப்பட்டுள்ள நடைமுறையின் ஒரு பகுதி ஆகும். இது எதிர்ஆணையுறுதி ஆவணம் இணைப்பு ஆர்/1ல் தெளிவாக இருக்கிறது. ஏதேனும் ஒரு நபரால் அந்த வகைக்குள் வரும் திட்டத்தை பெற முடியும் என்று இணைப்பு ஆர்/1ல் உள்ள நடைமுறை தெளிவாக சொல்கிறது. ஒரு தொழில்முறை வழக்கறிஞர் அந்த திட்டத்தின் பலனை பெறுவதிலிருந்து வெளியேற்றப்படுவார் என்று சொல்வதற்கு எந்த காரணமும் இல்லை. இணைப்பு ஆர்/1ல் உள்ள நடைமுறை பின்வருமாறு தெளிவாக சொல்கிறது.

அ. கீழ்க்கண்ட வகைகளுக்கு இலவச வேளாண்மை மின்சார

இணைப்பு கொடுக்கப்பட்டு கொண்டிருக்கிறது. இந்த வாரியம் அளவிடப்பட்ட செலவுகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளும்.

(i). இயல்பில் :

எந்த ஒரு நபரும் இதில் விண்ணப்பிக்க முடியும்.

(ii)xxx xxx xxx

19. மேல்முறையீட்டாளர் பதிவுக் கட்டணமாக ரூ.50 சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தெரியாமல் இருந்தார் என்று சொல்லும் வாதம் இரு நீதிபதிகள் அமர்வால் எந்த காரணமும் இல்லாமல் மறுக்கப்பட்டிருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். எதிர்மேல்முறையீட்டாளர் 07.03.2011 ம் தேதியிட்ட கடிதத்தை எழுதும் போது 06.12.2010 ம் தேதியிட்ட விண்ணப்பத்தில் உள்ள பதிவுக் கட்டணம் ரூ.50 செலுத்தப்படவில்லை என்ற குறையை சொல்லியிருப்பாரானால் இரு தரப்பினர்களின் நேரம் மற்றும் ஆற்றலை வீணாக்குவதையும் இந்த வழக்கையும் தவிர்த்து இருக்கலாம். எதிர்மேல்முறையீட்டாளர்கள் 07.03.2011 ம் தேதியிட்ட கடிதம் எழுதும் போது குறைபற்றி குறிப்பிடாமல் விட்ட செயலை அவர்களின் பலனுக்கு எடுத்துக் கொள்ள முடியாது என்று நாங்கள் கருதுகிறோம். மேல்முறையீட்டாளர் விண்ணப்பத்தை மறுசமர்ப்பிப்பு செய்த 21.03.2011 ம் தேதியிலிருந்து இந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதாக கருதப்படுவதற்கு மேல்முறையீட்டாளருக்கு உரிமை இருக்கிறது என்றும், 07.03.2011 ம் தேதியிட்ட கடிதத்தில் குறையை பற்றி தெரிவிக்காமல் இருந்த தங்களுடைய செயல்பாடிண்மையை வைத்து

எதிர்மேல்முறையீட்டாளர்கள் பலன் பெற அனுமதிக்கப்பட முடியாது என்றும் நாங்கள் கருதுகிறோம்.

20. நாங்கள் பின்வரும் உத்தரவுகளை வழங்கி இந்த மேல்முறையீட்டை தீர்வு செய்கிறோம்.

1. மறு சமர்ப்பிப்பு செய்யப்பட்ட 23.01.2011 ம் தேதியிலிருந்து மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டிருப்பதாக எதிர்மேல்முறையீட்டாளர்கள் கருத வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

2. 20.02.2017 ம் தேதியன்று எதிர்மேல்முறையீட்டாளர்களால் திருப்பப்பட்ட ரூ.550 க்கான கேட்பு வரைவோலைக்கு பதிலாக ஒரு புதிய கேட்பு வரைவோலையை மேல்முறையீட்டாளர் மறுசமர்ப்பிப்பு செய்ய வேண்டும்.

3. மேற்கொண்டு செலுத்த வேண்டிய கட்டணங்கள் அல்லது இந்த வகைக்காக மேல்முறையீட்டாளரால் பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள் பற்றி மூன்று மாதத்திற்குள் தெரிவித்து இந்த விண்ணப்பத்தை எதிர்மேல்முறையீட்டாளர்கள் செயல்படுத்த வேண்டும்.

மேல்முறையீடு முடித்துவைக்கப்படுகிறது

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."